

முதலாமச்சர் ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில் தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களின் விவசாயிகள் மற்றும் விளசாபிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கை குறித்த மனுவை அளித்தனர்.



முதலமைச்சர் மு.க. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதையொட்டி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் வேளாண் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பிரியங்கா பங்கஜம், வ. மோகனச்சந்திரன், மா. பிரதீப் குமார், ஹெச்.எஸ், ஶ்ரீகாந்த், திருமதி. மு.அருணா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் 15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து, மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்த மனுவை அளித்தனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!









தூத்துக்குடி,ஜூன்.17–

தூத்துக்குடி வடக்கு மாவட்ட ஒன்றிய– நகர– பகுதி– பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் 15.06.2025 அன்று தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் நாடாளு மன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான கீதா ஜீவன் மற்றும் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு மாநில துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளங்களை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைத்தள செயற்பாட்டாளர் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் வரவேற்புரை வழங்கினார். மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர் நன்றியுரை கூறினார்.

### சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடிவடபாதி, சட்டநாதபுரம், அகணி கிராமத்தில்

# மூன்றாம் கட்ட ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினர்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூன். 17–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடிவடபாதி, சட்டநாதபுரம், அகணி ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு, 126 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடி வடபாதி, சட்டநாதபுரம், அகணி ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஶ்ரீகாந்த் தலைமை தாங்கினார், மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி வரவேற்றார்.

சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடி வடபாதி, சட்டநாதபுரம், அகணி ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு, ஒரு பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகையும், 19 பயனாளிகளுக்கு முதல் பட்டதாரி சான்று, 25 பயனாளிகளுக்கு, இருப்பிட சான்று, 15 பயனாளிகளுக்கு வருமான சான்றுகளையும், வேளாண்மைத்துறை சார்பில் 8 பயனாளிகளுக்கு வேளாண்மை இடுபொருட்களும், ஒரு பயனாளிக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில் கறவைமாடு வாங்குவதற்கான கடனுதவியும், 6 விவசாய குழுத் தலைவர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் எண்ணெய் பிழியும் இயந்திரமும், தோட்டக்கலைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு பழக்கன்றுகளையும், 35 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்ட அட்டையையும், கூட்டுறவுத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.47 ஆயிரத்து 500 மதிப்பில் பயிர்கடனும், ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பில் மளிகைக்கடை அமைப்பதற்கான கடனுதவிற்கான காசோலையினையும், உழவர் பாதுகாப்புத் திட்டம் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.38 ஆயிரம் மதிப்பில் திருமண நிதியுதவியும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ.ஆயிரம் மதிப்பில் தற்காலிக இயலாமைக்கான நிதியுதவி என 126 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

மக்களிடம் முதல்வர் திட்ட முகாமில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:–

இந்த மக்களுடன் முதல்வர் திட்டம் மூலம் 15 துறைகளிலிருந்து 48 சேவைகள் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்; அறிவுரையின்படி, இன்று மயிலாடுதுறையில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ரூ.4 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டும் பணிகள் நடைபெற்றது. உங்களுக்கு என்னென்ன கோரிக்கை உள்ளதோ அனைத்தையும் மனுக்களாக தந்து, உரிய தீர்வை பெற்றுக்கொள்ளலாம். ஒரே நாளில் 5 இடங்களில் நடைபெறும் ஒரே நிகழ்ச்சி இந்த மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி. அரசை தேடி மக்கள் வரும் நிலை மாறி, இன்று மக்களைத்தேடி ஒரு அரசாங்கமே வரும் நிகழ்ச்சி இது. இங்கு பெண்கள் பலரும் உள்ளனர். பல நலத்திட்ட உதவிகளையும் வழங்க உள்ளோம்.

முதல் கட்டம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலும், இரண்டாவது கட்டம், ஊராட்சி பகுதிகளிலும்;; நடத்தப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விளிம்பு நிலையில் உள்ள மக்கள், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கூலி வேலைக்கு செல்பவர்கள், குக்கிராம மக்கள், ஆதிதிராவிட மக்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளை பெற்று அதற்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில் இன்று இந்த நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்கின்றது. இதனை பொதுமக்களாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசினார்.

நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன் ஜி.என்.ரவி. மாவட்டக் கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்டக் கழக மகா . அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர் ஏ,ஜி. ஜே.பிரபாகர், பஞ்சு. குமார், மலர்விழி திருமாவளவன், செல்ல.சேதுரவிக்குமார், பி.எம். அன்பழகன், எம். அப்துல்மாலிக், ஞான.இமயநாதன், ஏ.ஆர். ராஜா, சீர்காழி நகரக் கழக செயலாளர் ம. சுப்பராயன், முன்னாள் ஒன்றிய குழு மேலையூர் முத்து.தேவேந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், நத்தம் ஏ.வின்சென்ட், சுபா நெடுஞ்செழியன், எஸ்.காந்தி. பேரூர் செயலாளர்கள் எம் அன்பு செழியன், முத்துராஜா,

ஒன்றிய குழு முன்னால் தலைவர்கள் தியாக.விஜேஸ்வரன், ஜெயபிரகாஷ் க.சுரேஷ், மாவட்ட சார்பு அமைப்பாளர்கள் முத்துக்குபேரன், முருகன், தன்ராஜ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் செல்லமுத்து, பெரியசாமி, அரசு வழக்கறிஞர் அருள்தாஸ், சீர்காழி மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் வீரமணி, பி.அன்பழகன், கே.சசிகுமார், முகமது இன்தரிஸ், மகேந்திரன் | ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தென்னரசன் மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு பணி நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிதழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற நலத்திட்ட முகாமில் கழகத்தினருக்கு நலத்திட்ட உதவிகளை பிறப்டுத்தப்பட்டோர் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி மேற்கு ஒன்றியச் செயலாளர் .ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சுவாமிநாதன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் தியாக.விஜயேஸ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.

### நீதியரசர் வி.பாரதிதாசன் தலைமையில் – செ.ஏழுமலை எழுதிய

# கலைஞர் – வரலாற்றுச் சுவடுகள் நூல் அறிமுகம்!

## கவிஞர்கள் பூவை செங்குட்டுவன் – காசிமுத்துமாணிக்கம் பங்கேற்பு!

*சென்னை, ஜூன், 17 -*

*புதுக்கவிதை மன்னன் பேராசிரியர் செ. ஏழுமலை எழுதிய ‘கலைஞர் - வரலாற்றுச் சுவடுகள்’ நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் (15.6.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. எசுபிளனேடு அரங்கத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய தலைவர் நீதியரசர் வி. பாரதிதாசன் தலைமை வகித்தார்.*

*பழம்பெரும் திரைபடப் பாடலாசிரியர் கலைமாமணி கவிஞர் பூவை செங்குட்டுவன் முன்னிலை வகிக்க, கவிஞர் காசிமுத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார்.*

*இந்நிகழ்வில் ஔவை அருள் நடராசன், முனைவர். தாமரைக் கண்ணன், புலவர் சீ. கிருட்டிண மூர்த்தி, டி.ஏ., சாயாகுமார், பா. ஆசிர்பாண்டியன், போதகர் மேக்ஸ் பிரேம் சன், ஆ.டென்னனிஸ் பெசனியோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*